Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 55 உள்ளூர் - 24.02.2026 செவ்வாய் விலை ரூ.3/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 54 * Issue 55 வெளியூர் - 25.02.2026 புதன் Price Rs. 3/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

**ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் - 612 காலியிடங்கள்!** | **கடன் சுமையை குறைக்க 'லால் கிதாப்' பரிகாரங்கள்!** | **அதிமுக: 3-ம் கட்ட தேர்தல் அறிக்கை வெளியீடு!** | **நல்லகண்ணு உடல்நிலை பின்னடைவு..!!**

## ஜெயலலிதா பிறந்தநாள்.. பிரதமர் மோடி தமிழில் புகழாரம்..!



புதுடெல்லி, பிப். 24–

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 78–வது பிறந்தநாளை ஒட்டி அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்..

அந்த வகையில் பிரதமர் மோடி ஜெயலலிதா பிறந்தநாளை முன்னிட்டு புகழாரம் சூட்டி உள்ளார்.. தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர் " ஜெயலலிதா அவர்களை அவரது பிறந்த நாளில் நினைவு கூர்கிறேன். மனம் கவர்ந்த தலைவர் மற்றும் தலைசிறந்த நிர்வாகியாக எண்ணற்ற மக்களின் இதயங்களிலும், மனங்களிலும் அவர் இடம் பிடித்துள்ளார். அவரது வாழ்க்கைப் பயணம் மன உறுதி மற்றும் தீர்மானத்துடன் இருந்தது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில், பெண்களுக்கு அதிகாரமளித்தல் குறித்து வலுவான நோக்கத்துடனும், சமூக நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நலத்திட்டங்களாலும் இயக்கப்பட்ட நிர்வாகத்தில் சிறந்த ஆட்சியாளராக திகழ்ந்தார். கருணை, உறுதி என்ற இரண்டு பண்புகளையும் அவர் கொண்டிருந்தார். அவருடனான எனது கலந்துரையாடல்களை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் நினைவு கூர்கிறேன். அவரைப் பற்றி இந்த மாத #MannKiBaat நிகழ்ச்சியில் நான் என்ன கூறினேன் என்பது இங்கு இடம் பெற்றுள்ளது." என்று தெரிவித்துள்ளார்..

அதே போல் மத்திய உள்துறை அமித்ஷா ஜெயலலிதா பிறந்தநாளில் அவருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். தனது எக்ஸ் பக்க பதிவில் " முன்னாள் தமிழக முதல்வரும் மக்கள் தலைவருமான ஜெ.ஜெயலலிதா அவர்களின் பிறந்த தினத்தில் அவருக்கு புகழஞ்சலிகள். ஏழைகளின் நலனுக்காகவும், பெண்களின் உரிமைக்காகவும் அவர் அர்ப்பணிப்புடன் செயல்பட்டதன் மூலம், தமிழ்நாட்டின் வளர்ச்சியை மறுசீரமைத்து, அவரது ஆட்சியின் பலன்களை கடைக்கோடி மக்கள் வரை சென்றடைவதை உறுதி செய்தார். பொது சேவையில் அவரது அர்ப்பணிப்பு அனைவருக்கும் எப்போதும் ஒரு உத்வேகத்தை தரும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

## பிப்.26-ல் இந்தியா வருகிறார் கனடா பிரதமர் மார்க் கார்னி!



புதுடில்லி, பிப். 24–

கனடா பிரதமர் மார்க் கார்னி பிப்.26ம் தேதி இந்தியா வருகிறார். இது அவரது முதல் இந்திய பயணமாகும்.

கனடாவின் பிரதமர் மார்க் கார்னி பிப்.26 முதல் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். டில்லி வரும் அவர், பிரதமர் மோடியை சந்திக்கிறார். இந்த சந்திப்பின் போது, பொருளாதாரம், எரிசக்தி, யுரேனியம் வினியோகம், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளின் ஒத்துழைப்பு குறித்து அவர் பிரதமர் மோடியுடன் ஆலோசனை நடத்துகிறார்.

இருநாடுகள் இடையே பல்வேறு துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன. கனடா பிரதமர் மார்க் கார்னி பயணத்தை அந்நாடு அதிகாரப்பூர்வமாக உறுதி செய்துள்ளது. பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் இருநாடுகளின் தலைவர்களும் கவனம் செலுத்துவார்கள் என்று கனடா அரசு அறிவித்துள்ளது.

கனடாவில் புதிய முதலீடுகளை ஈர்க்கும் வண்ணம், பிரதமர் மார்க் கார்னி தொழிலதிபர்களையும் சந்திக்கிறார். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கனடாவின் பிரதமராக ஜஸ்டின் ட்ரூடோ பதவியில் இருந்த போது காலிஸ்தான் பயங்கரவாதி கொல்லப்பட்ட விவகாரத்தில் இந்தியாவின் மீது குற்றம்சாட்டி இருந்தார். அதன் காரணமாக இரு நாடுகளின் உறவில் சிக்கல் ஏற்பட்டது. புதிய பிரதமராக பொறுப்பேற்ற மார்க் கார்னி, இரு நாட்டு உறவில் ஏற்பட்ட சிக்கல்களை சீர் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மார்ச் 1-ந்தேதி மதுரை வரும் பிரதமர் மோடி; திருப்பரங்குன்றம் கோவிலில் சாமி தரிசனம் செய்கிறார்!



புதுடெல்லி, பிப். 24–

தமிழ்க்கடவுள் முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் முதல் படை வீடாக மதுரை திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவில் விளங்குகிறது.

இந்த திருத்தலத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன் சாமி தரிசனம் செய்தார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கோவில் வாசல் வழியாக சென்ற அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதாவும் காரில் இருந்தபடி தரிசனம் செய்தார்.

இந்த நிலையில் வருகிற 1–ந்தேதி மதுரையில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடி வருகிறார். இதையொட்டி அவர் திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதை முன்னிட்டு கோவில் வாசலில் இருந்து கருவறை வரையிலும் அதிகாரிகள் பார்வையிட்டு உள்ளனர். கருவறைக்கு முன்னதாக உள்ள மகாமண்டபத்தின் படிக்கட்டுகளில் பிரதமர் ஏறி கருவறைக்கு எளிதாக சென்று வர வசதியாக படிக்கட்டுகளை சீரமைப்பது குறித்தும் கோவில் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். இன்று போலீஸ் பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து முக்கிய ஆலோசனை நடைபெற உள்ளதாக கூறப்படுகிறது. சுமார் 15 நிமிடங்கள் முதல் 30 நிமிடம் வரை கோவிலில் பிரதமர் தரிசனம் செய்துவிட்டு திரும்புவார் எனவும் தெரிகிறது. இதற்கான அதிகாரப்பூர்வ தகவல் ஓரிருநாளில் தெரிய வரும் என கூறப்படுகிறது.

## சூடுபிடிக்கும் தேர்தல் களம்..!! மத்திய துணை ராணுவப் படை தமிழ்நாட்டிற்கு வருகை..!!



சென்னை, பிப். 24–

தமிழ்நாட்டில் 2026 சட்டமன்ற தேர்தல் களம் சூடுபிடிக்க தொடங்கியுள்ள நிலையில், , மாநிலம் முழுவதும் உள்ள இறுதி வாக்காளர் பட்டியல் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டு, வாக்காளர்களின் எண்ணிக்கை உறுதி செய்யப்பட்டுள்ளது. தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதன்படி, தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக முதற்கட்டமாக மத்திய துணை ராணுவப் படையைச் சேர்ந்த 50 கம்பெனிகள் வரும் மார்ச் 10–ஆம் தேதி தமிழகம் வரவுள்ளன.


பதற்றமான வாக்குச்சாவடிகளைக் கண்டறிதல் மற்றும் பாதுகாப்பு ஒத்திகைகளை முன்கூட்டியே மேற்கொள்வதற்காக இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்பே பாதுகாப்புப் படைகள் வரவுள்ளது, அரசியல் வட்டாரத்தில் கூடுதல் கவனத்தைப் பெற்றுள்ளது.

## ஈரான்–அமெரிக்கா பதற்றம்:

# இந்தியர்களுக்கு பறந்த வார்னிங்?

## அமெரிக்க அதிபரின் கெடு...!



EMBASSY OF INDIA
TEHRAN

ADVISORY

23 February 2026

1. In continuation of the advisory issued by the Government of India on 5 January 2026, and in view of the evolving situation in Iran, Indian nationals who are currently in Iran (students, pilgrims, business persons and tourists) are advised to leave Iran by available means of transport, including commercial flights.

2. The 14 January 2026 Advisory is hereby reiterated that all Indian citizens and PIOs should exercise due caution, avoid areas of protests or demonstrations, stay in contact with the Indian Embassy in Iran and monitor local media for any developments.

3. All Indian nationals in Iran are requested to also have their travel and immigration documents, including passports and IDs, readily available with them. They are requested to contact the Indian Embassy for any assistance in this regard.

4. The emergency contact helplines of the Indian Embassy are provided below:
Mobile Numbers: +989128109115; +989128109109; +989128109102; +989932179359.
Email: cons.tehran@mea.gov.in

5. All Indian nationals who are in Iran, and who have not registered with the Indian Embassy, are requested to do so on the link (https://www.meaers.com/request/home). The link is also available on the Embassy website. In case any Indian national is unable to register due to internet disruptions in Iran, their families in India are requested to do so.



ஈரான், பிப். 24–

ஈரான்–அமெரிக்கா இடையே ராணுவ மோதல் அச்சம் அதிகரித்துள்ள நிலையில், இந்திய அரசு ஈரானில் இருக்கும் இந்திய குடிமக்களுக்கு புதிய எச்சரிக்கை விடுத்துள்ளது. ஏற்கனவே அமெரிக்க அரசு ஈரான் நாட்டை சுற்றி போர் கப்பல்களையும், போர் விமானங்களை நிறுத்தி வைத்துள்ளது. இதனால் எந்த நேரத்திலும் அமெரிக்கா ஈரான் நாட்டை தாக்கலாம் என்ற அச்சம் அதிகரித்து ள்ளது. ஈரானில் இருக்கும் இந்தியர்கள் (மாணவர்கள், வியாபாரிகள், சுற்றுலாப்பயணிகள், பக்தர்கள் என அனைவரும்) உடனடியாக விமானங்கள் உள்ளிட்ட அனைத்து விதிமான போக்கு வரத்து வசதிகளையும் பயன்படுத்தி நாடு திரும்புமாறு இந்திய தூதரகம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது ஜனவரி 5, 2026 அன்று வெளியான அறிவிப்பின் தொடர்ச்சியாக பிப்ரவரி 23, 2026 அன்று டெஹ்ரான் இந்திய தூதரகம் இந்த அறிவிப்பை வெளியிட்டு உள்ளது.

**அமெரிக்க அதிபரின் கெடு:**

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ஈரானுக்கு அணு ஆயுத ஒப்பந்தத்துக்கு சம்மதிக்க 10–15 நாட்கள் கெடு விதித்துள்ளார். இல்லையெனில் அது ஈரானுக்கு ஆபத்து என எச்சரித்துள்ளார். இதனால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் உச்சத்தில் உள்ளது. அடுத்த சுற்று பேச்சு வார்த்தை பிப்ரவரி 26 அன்று சுவி ட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெறும் என ஓமான் வெளியுறவு அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார். ஓமான் ஏற்கெனவே இரு நாடுகளுக்கும் இடையே சமரசம் செய்து வருகிறது.

இந்தியர்களுக்கு பாதுகாப்பு அறிவுரைகள் ஜனவரி 14, 2026 அறிவிப்பை மீண்டும் வலியுறுத்திய இந்திய தூதரகம், இந்தியர்கள் போராட்டங்கள் அல்லது ஆர்ப்பாட்டங்கள் நடக்கும் இடங்களை தவிர்க்க வேண்டும் என கூறியுள்ளது. உள்ளூர் ஊடகங்களை கண்காணித்து, வெளியில் நடக்கும் சம்பவங்களை தெரிந்து கொள்ள அறிவுறுத்தியுள்ளது. மேலும் பயண மற்றும் இமிக்ரேஷன் தேவைக்கான பாஸ்போர்ட், அடையாளத்தை உறுதி செய்யும் ஆவணங்களை எப்போதும் தயாராக வைத்திருக்க வேண்டும்.

இதோடு ஈரானில் இருக்கும் இந்தியர்கள் அனைவரும், இந்திய தூதரகத்தில் பதிவு செய்ய வேண்டும், அப்படி செய்யாதவர்கள் (https://www.meares.com/re–quest/home) இந்த இணைப்பில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் ஈரானில் இண்டர்நெட் இணைப்பில் பிரச்சனை ஏதும் இருந்தால், இந்தி யாவில் உள்ள குடும்பத்தினர் தூதரக இணையதளம் வழியாக பதிவு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. . ஈரானில் உள்ள இந்தியர்கள் எந்த உதவியும் தேவைப்பட்டால், இந்திய தூதரகத்தை தொடர்பு கொள்ளலாம். அவசர தொலைபேசி எண்கள்: +989128109115, +989128109109, +989128109102, +989321793599. இமெயில்: cons.tehran@mea.gov.in. தூதரக இணையதளத்தில் பதிவு செய்யவும். இந்த நடவடிக்கைகள் இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவே.



கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக தூத்துக்குடியிலிருந்து கன்னியாகுமரி செல்லும் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தலையங்கம் மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 24.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 12-ம் தேதி

# துரத்தும் வரி அச்சம்.. தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும் என்ன பாதிப்பு..?




அமெரிக்க உச்சநீதிமன்ற ரெசிப்ரோக்கல் வரி விதிப்புக்கு எதிராகவும், ரத்து செய்யவும் தீர்ப்பு அளித்த பின்பு, அமெரிக்கா அதிபரான டிரம்ப் திடீரென உலக நாடுகளுக்கு விதித்திருந்த 10% அடிப்படை சுங்கவரியை 15% ஆக உயர்த்தினார். இதன் மூலம் ஏற்கனவே விதிக்கப்பட்ட அனைத்து வரிகளும் நீக்கப்பட்டு தற்போது அடிப்படையாக அனைத்து நாடுகளுக்கும் 15 சதவீத வரி விதிக்கப்பட்ட உள்ளது. பிப்ரவரி 20ஆம் தேதி வெளியிடப்பட்ட வெள்ளை மாளிகை அறிவிப்பின் மூலம் இந்த புதிய சுங்கவரி அமலுக்கு வந்ததுள்ளது. இதனால் இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் தங்கள் ஏற்றுமதி வர்த்தக பாதிப்பை மதிப்பீடு செய்து வருகின்றன. குறிப்பாக இந்தியா, அமெரிக்காவுடன் செய்யப்பட்ட வர்த்தக ஒப்பந்தம் இதன் மூலம் பெரும் மாற்றத்தை எதிர்கொள்ள உள்ளது.

**இந்திய ஏற்றுமதிக்கு என்ன மாற்றம்?**

இந்தியா – அமெரிக்கா மத்தியிலான வர்த்தக ஒப்பந்தம் வாயிலாக 51 சதவீதமாக இருந்த வரி 18 சதவீதமாக குறைந்தது. இதன் மூலம் அமெரிக்க சந்தைக்கு இந்தியா ஏற்றுமதி செய்த சில பொருட்களுக்கு 18% வரை சுங்கவரி நடைமுறைக்கு வந்தது. ஆனால் தற்போது 15% என்ற ஒரே அளவிலான உலகளாவிய சுங்கவரி அமல்படுத்தப்பட்டுள்ளதால், இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு தற்காலிக நிம்மதி கிடைத்துள்ளது. குறிப்பாக டெக்ஸ்டைல், கெமிக்கல், இன்ஜினியரிங் பொருட்கள், ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள் போன்ற துறைகளில் இது சாதகமானதாக மாற்றியுள்ளது. ஆனால் இதுவே நிரந்தர தீர்வா என்ற கேள்வி இன்னும் நிலவுகிறது. ஏனெனில் அமெரிக்கா தனது வர்த்தக கொள்கையில் அடிக்கடி மாற்றம் செய்வது சந்தையில் குழப்பத்தை உருவாக்குகிறது.

**இந்தியா–அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தத்தின் நிலை என்ன? டிரம்ப் ;**

''இந்தியாவுடன் இருக்கும் வர்த்தக ஒப்பந்தத்தில் மாற்றமில்லை'' என்று தெரிவித்துள்ளார். ''இந்தியா ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு சுங்கவரி செலுத்துவார்கள்; அமெரிக்கா எவ்விதமான வரியும் செலுத்தாது.'' என்ற அவரது கருத்து, அமெரிக்காவின் கடுமையான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது. இதற்கிடையில், இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் அடுத்த மாதம் கையெழுத்தாகி ஏப்ரல் மாதம் முதல் அமலுக்கு வரலாம் என்று தெரிவித்துள்ளார். இருதரப்பு ஒப்பந்தத்தின் முதல் கட்ட சட்ட விதிகளை இறுதி செய்ய இந்திய குழு பிப்ரவரி 23–26 வரையிலான காலக்கட்டத்தில் அமெரிக்காவினஅ தலைநகர் வாஷிங்டனுக்கு பயணம் மேற்கொண்டுள்ளது.

**ஏற்றுமதியாளர்களின் கவலை என்ன?:**

இந்திய ஏற்றுமதியாளர்கள் முன்பு 25% சுங்கவரி அடிப்படையில் அமெரிக்க இறக்குமதியாளர்களுக்கு பொருட்களை சப்ளை செய்து வந்தனர். இப்போது அது 15% ஆக குறைந்துள்ளதால், ஏற்கனவே செலுத்திய அதிகப்படியான வரி தொகை ரீபண்ட் கிடைக்குமா என்பது குறித்து இந்திய ஏற்றுமதியாளர்கள் கவலையுடன் ஏதிர்பார்த்து நிற்கின்றனர். அமெரிக்காவின் அடுத்த கட்ட நடவடிக்கை?:

அமெரிக்கா 1930ஆம் ஆண்டு Tariff Act இன் Section 338–ஐ பயன்படுத்தி, அமெரிக்காவுக்கு எதிராக பாகுபாடு காட்டும் நாடுகளுக்கு பதிலடியாத சுங்கவரி விதிக்கலாம் என்பதால் டிரம்ப் அதை பயன்படுத்தி தற்போது 15 சதவீதம் வரையிலான வரியை விதித்துள்ளார். மேலும் 1974 Trade Act இன் Section 301–ஐ பயன்படுத்தி ''நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள்'' மீது விசாரணை நடத்தி சுங்கவரி விதிக்கும் வாய்ப்பும் உள்ளது. ஆனால் இவை நீண்டகால விசாரணை மற்றும் நடைமுறைகளை உட்படுத்தும்.

தமிழ்நாடு மீதான தாக்கம் இந்த மாற்றம் தமிழ்நாட்டின் ஏற்றுமதி துறைக்கு முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். சென்னை, கோயம்புத்தூர், திருப்பூர், ஓசூர் போன்ற பகுதிகளில் இருந்து அமெரிக்காவுக்கு டெக்ஸ்டைல், ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள், மின்னணு உற்பத்திகள் மற்றும் ஐடி சேவைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 15% சுங்கவரி நிலை நீடித்தால், விலை போட்டியில் தமிழ்நாட்டு நிறுவனங்கள் உலக நாடுகளுடன் சமநிலையில் போட்டிப்போடும் போது சவால்களை சந்திக்கலாம். குறிப்பாக MSME துறையில் செயல்படும் சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு, ஏற்றுமதி ஆர்டர்கள் மற்றும் லாப விகிதத்தில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதே நேரத்தில், 18% என்பதற்குப் பதிலாக 15% என்ற ஒரே சுங்கவரி குறைந்திருப்பது சாதகமான வாய்ப்பை வழங்குகிறது.

வர்த்தக நிபுணர்கள் கூறுவதாவது, இந்தியா அமெரிக்கா உடனான தனது ஒப்பந்த நிபந்தனைகளை மீண்டும் மதிப்பீடு செய்து தேவையான மாற்றங்களை கோர வேண்டும். ஏனெனில் ஒப்பந்த வடிவமைப்பில், ''ஏதேனும் சுங்கவரி மாற்றம் ஏற்பட்டால், இரு நாடுகளும் தங்கள் பொறுப்புகளை மாற்றிக் கொள்ளலாம்'' என்ற ஒரு கண்டிஷன் உள்ளது. மொத்தத்தில், அமெரிக்காவின் 15% சுங்கவரி அறிவிப்பு இந்தியாவுக்கு உடனடி அதிர்ச்சி அல்ல; ஆனால் நீண்டகால வர்த்தகத் திட்டமிடலில் இது முக்கியமான திருப்பமாக அமையும். குறிப்பாக தமிழ்நாடு போன்ற ஏற்றுமதி சார்ந்த மாநிலங்களுக்கு, இந்த மாற்றம் வரவிருக்கும் மாதங்களில் கண்காணிக்க வேண்டிய முக்கிய பொருளாதார சிக்னலாகும்.



ஜெயலலிதாவின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வருகை தந்தார். அவர் ஜெயலலிதாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சுப்புராஜ் நகர் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் ஐயா ஓ பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் மறைந்த அம்மையார் ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

# ராகுல் டிராவிட் கோல்கேட் டோட்டலின் புதிய பிராண்ட் தூதர் வாய்ச் சுகாதாரத்தால் உச்ச செயல்திறன் மீது கவனம்!

கோல்கேட்– பாமோலிவ் (India) Limited நிறுவனம், தனது முன்னணி பல் பாதுகாப்பு தயாரிப்பு Colgate Total க்கு புதிய பிராண்ட் தூதராக இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் Rahul Dravidவை இணைத்துள்ளது. இந்த கூட்டாண்மை வாய்ச் சுகாதாரம் வெறும் சுகாதார பழக்கம் அல்லது, உச்ச செயல்திறனுக்கான அடிப்படை அம்சமாக வலியு றுத்தும் புதிய அணுகுமுறை முன்னிறுத்துகிறது. விளையாட்டில் சிறிய முன்னேற்றங்கள் பெரிய வெற்றியை தீர்மானிக்கும் நிலையில், வாய் நலனும் அதில் முக்கிய பங்கு வகிக்கிறது என நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிராண்ட் தூதர் ராகுல் டிராவிட் கூறுகையில், ''விளையாட்டு செயல்திற னில் ஒவ்வொரு விவரமும் முக்கியமானது. வாய்வழி சுகாதாரமும் அதில் ஒன்று. கோல்கேட் டோட்டல் 8 வகையான பல் பிரச்சனைகளை தடுக்க உதவுகிறது; இது விளையாட்டு வீரர்களுக்கு கூடுதல் முன்னிலை அளிக்கிறது,'' என்றார். பல அணிகள் தற்போது பல் பரிசோதனைகளை கட்டாயமாக்கி வருவது, வாய் நலனின் அவசியத்தை வெளிப்படுத்து வதாகவும் அவர் குறிப்பிட்டார். நிறுவனத்தின் மார்க்கெட்டிங் செயல் துணைத் தலைவர் குஞ்சித் ஜெயின் கூறுகையில், ''வாயில் உள்ள கிருமிகள் உடலில் மீளுருவாக்கத்தையும் சக்தி திறனையும் பாதிக்கக்கூடும் என்பது அறிவியல் ஆதாரத்தால் நிரூபிக்கப்பட்டுள்ளது. கோல்கேட் டோட்டல் இரட்டை துத்தநாகம் + ஆர்ஜினைன் தொழில்நுட்பம் கிருமிகளை 3 மடங்கு சிறப்பாக எதிர்த்து, 8 பல் பிரச்சனைகளை தடுக்கிறது. வாய்ச் சுகாதாரம் செயல்திறனை மறைந்த 1% ரகசிய ஆயுதமாக மாற்றுவது எங்கள் நோக்கம்,'' என்றார்.

# திருச்சியில் பிரமாண்டமாக நடைபெற்ற வெரொண்டா ரேஸ் -TNTET 2025 வெற்றி கொண்டாட்டம்!

சென்னை, பிப். 24–

திருச்சியில் Veranda RACE நிறுவனம் சார்பில் TNTET 2025 தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் வகையில் வெரொண்டா ரேஸ் TNTET வெற்றி கொண்டாட்டம் 2026'' விழா பிப்ரவரி 22ஆம் தேதி மேலப்புதூரில் உள்ள செயின்ட் மேரி ஹால் வளாகத்தில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. சமீபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு ஆசிரியர் தகுதி தேர்வு (TNTET) 2025ல் தேர்ச்சி பெற்ற மாண வர்கள் இந்நிகழ்வில் பாராட்டப்பட்டனர்.

வெரொண்டா ரேஸ் நிறுவனத்தில் TNTET தேர்வுக்கான பயிற்சி பெற்ற 750 மாணவர்களில் 352–க்கும் மேற்பட்டோர் தேர்ச்சி பெற்றுள்ளனர். 14 ஆண்டுகளுக்கும் மேலான கல்வி பாரம்பரியத்துடன், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் 40–க்கும் மேற்பட்ட பயிற்சி மையங்களை கொண்டு செயல்பட்டு வரும் இந்நிறுவனம், 50,000–க்கும் மேற்பட்ட வங்கி மற்றும் அரசு அதிகாரிகளை உருவாக்கிய முன்னணி பயிற்சி நிறுவனமாக திகழ்கிறது.



நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய Ilango Lakshmanan (Chairman, Veranda Learning Solutions) தெரிவித்ததாவது: ''TNTET தேர்வில் வெற்றி பெறுவது ஒரு சாதனையைத் தாண்டி, எதிர்கால தலைமுறையை வழிநடத்தும் பொறுப்பாகும். எங்கள் மாணவர்கள் தொடர்ந்து சாதித்து வருவது பெருமையாகும்,'' என்றார். விழாவில் மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு வெற்றியை கொண்டாடினர்.

# தமிழ்நாட்டு மாணவர்கள் 'சிறந்த கேம்பிரிட்ஜ் மாணவர் விருதுகளில்' சிறப்பு சாதனை; 12 பள்ளிகளில் 17 பேருக்கு விருது!

கோயம்புத்தூர், பிப். 24–

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம் & மதிப்பீடு அமைப்பின் சர்வதேச கல்விப் பிரிவு, 2024 நவம்பர் மற்றும் 2025 மார்ச், ஜூன் தேர்வுத் தொடர்களுக்கான 'சிறந்த கேம்பிரிட்ஜ் மாணவர் விருதுகள்' பட்டியலை அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் 12 பள்ளிகளைச் சேர்ந்த 17 மாணவர்கள் Cambridge Assessment International Education நடத்தும் IGCSE மற்றும் AS & A Level தேர்வுகளில் சிறப்பான மதிப்பெண்கள் பெற்று

CAMBRIDGE

விருதுகளைப் பெற உள்ளனர். இந்திய அளவில் 227–க்கும் மேற்பட்ட மாண வர்கள் இந்த விருதுகளை வென்றுள்ளனர். இந்த விருதுகள் உலகம் முழுவதும் 40–க்கும் மேற்பட்ட நாடு களில் கேம்பிரிட்ஜ் தேர்வு களை எழுதும் மாணவர்களின் கல்விச் சாதனைகளை கௌரவிக்கின்றன. குறிப்பிட்ட பாடங்களில் உலக அளவில் மற்றும் இந்திய அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களும் இதில் அடங்குவர். மேலும், இங்கிலாந்தின் ரஸல் குழுமத்தைச் சேர்ந்த பல்கலைக்கழகங்களின் இந்திய கிளை வளாகங்கள், விருது பெற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகைகளையும் அறிவித்துள்ளன.

கேம்பிரிட்ஜ் சர்வதேச கல்வியின் தெற்காசிய பிராந்திய இயக்குநர் வினய் சர்மா கூறுகையில், ''இந்திய மாணவர்களின் அபாரமான சாதனைகளை கொண்டாடு வதில் பெருமை கொள்கி றோம். அவர்களின் வெற்றி அர்ப்பணிப்பு, விடாமுயற்சி மற்றும் உயர்ந்த கல்வித்தி றனின் பிரதிபலிப்பாகும். இந்த விருதுகள் மாண வர்களை மட்டுமல்லாது, அவர்களுக்கு துணையாக இருந்த ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களையும் கௌரவிக்கின்றன,'' என்றார்.

# சென்னையில் 1,500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் டீச் ஃபோர் இந்தியா 10-வது 'சென்னை ஸ்டூடண்ட் கொண்டாட்டம்' வெற்றிகரமாக நடத்தியது!

சென்னை, பிப். 24–

கல்வி சமத்துவத்தை முன்னெடுக்கும் தொண்டு நிறுவனமான டீச் ஃபோர் இந்தியா, சென்னையில் தனது 10வது 'சென்னை ஸ்டூடண்ட் கொண்டாட்டம்' நிகழ்ச்சியை பிப்ரவரி 21 மற்றும் 22 தேதிகளில் திருவான்மியூரில் உள்ள CHS வளாகத்தில் வெற்றி கரமாக நடத்தியது. இந்த பிரமாண்ட விளையாட்டு மற்றும் கலாச்சார விழாவில் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த 1,500–க்கும் மேற்பட்ட மாணவர்கள்



உற்சாகமாக பங்கேற்றனர். சென்னை முழுவதும் உள்ள அரசு மற்றும் குறைந்த வருமானம் கொண்ட தனியார் பள்ளிகளில் 2 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் கல்வி, தடகளம், அணி விளையாட்டுகள், வினாடி வினா, நடனம், இசை மற்றும் கலைக் கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சி களில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். இந்த நிகழ்வு முழுமையான கல்வி மற்றும் மாணவர்களின் தலைமைத்துவ திறனை ஊக்குவிக்கும் நோக்கில் தன்னார்வலர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வின் வெற்றி குறித்து Prabhakaran Karunamoorthy கூறுகையில், ''மாணவர்களுக்கு சரியான வாய்ப்புகளும் நம்பிக்கையும் வழங்கப்பட்டால் அவர்கள் எதைச் சாதிக்க முடியும் என்பதற்கு இந்த கொண்டாட்டம் சிறந்த உதாரணம். வகுப்பறைக்கு அப்பால் அவர்களின் குரல், திறமைகள் மற்றும் கனவுகளை வெளிப்படுத்தும் தளமாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது,'' என்றார்.

# சென்னையில் முதல் கிளை: Gen Z-க்கு புதிய பியூட்டி அனுபவத்தை அறிமுகப்படுத்திய YBE


சென்னை, பிப். 24–

YBE சென்னையில் தனது முதல் கிளையைத் தொடங்கி, Gen Z மற்றும் இளம் தொழில்முறை வாடிக்கை யாளர்களுக்கு புதிய பியூட்டி சேவை அனுபவத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. Nails, Lashes மற்றும் Brows சேவைகளில் மட்டும் கவனம் செலுத்தும் இந்த சிறப்பு சலூன் பிராண்டு, Tip & Toe Salon மூலம் அடையார், பேசன்ட் அவென்யூவில் தனது முதல் அவுட்லெட் திறந்துள்ளது. சுமார் 400 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள இந்த கிளையில் 4 Nails சேவை நிலை யங்கள், 3 Pedicure லவுஞ்ச் இருக்கை கள் மற்றும் தனித்த Lashes & Brows பிரிவு உள்ளன. அனை த்து சேவைக ளும் 60 நிமிடங்களுக்குள் முடிக்க ப்படும் வடிவமைக்கப்ப ட்டுள்ளன. Premium மற்றும் Budget சேவை களுக்கி டையிலான விலை வித்தியாச த்தை குறைக்கும் நோக்கில், நகர்ப்புற இளைஞர்கள்,



கல்லூரி மாணவர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் ஏற்ற விலையில் சேவைகள் வழங்கப்படுகின்றன.

விரிவாக்கத் திட்டம் குறித்து Manashee Surave தெரிவித்ததாவது: ''Gen Z மற்றும் இளம் தொழில்முறை வாடிக்கையாளர்களுக்கு சர்வதேச தர சேவை களை அணுகக்கூடிய விலையில் வழங்குவதே எங்களின் நோக்கம். சென்னை இதற்கான சரியான தொடக்கம்.'' Franchise முறையில் மும்பை, புனே, பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் அகமதாபாத் உள்ளிட்ட நகரங்களில் விரைவில் கிளைகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.



# கடன் சுமையை குறைக்க உதவும் என நம்பப்படும் 'லால் கிதாப்' பரிகாரங்கள் - ஒரு பார்வை!




நம் வாழ்க்கையில் காணப்படும் பிரச்சனைகளுக்கு நடைமுறை சாத்தியக்கூறு கொண்ட தீர்வுகளை அளிக்கும், தனித்துவமான வேத ஜோதிட குறிப்புகள், கைரேகை சாஸ்திர குறிப்புகளை கொண்ட புத்தகம் 'லால் கிதாப்' எனப்படுகிறது. இந்த சிறப்பு புத்தகத்தில் இடம்பெற்றிருக்கும் குறிப்புகளின் அடிப்படையில், கடன் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது எப்படி? நம் தினசரி வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டிய மாற்றங்கள் என்ன? என்பது குறித்து சற்று விரிவாக நாம் காணலாம்!

**சூரியனை பலப்படுத்துங்கள்!**

கடன் பிரச்சனைகளில் இருந்து தீர்வு காணவும், கடன் வாங்காத ஒரு சூழ்நிலையை உருவாக்கவும், உங்கள் ஜாதகத்தின் சூரியனின் நிலையை பலப்படுத்துவது அவசியம் என 'லால் கிதாப்' குறிப்புகள் தெரிவிக்கின்றன. சூரியனை பலப்படுத்த, தினமும் காலை முறையாக சூரிய நமஸ்காரம் செய்வது அவசியம்.

அதாவது, சூரிய உதத்தின் போது தாமிரச் சொம்பில் நீர் அர்ப்பணித்து, 'ஓம் சூர்யாய நமஹ' எனும் மந்திரத்தை உச்சரித்து – சூரியனை வழிபட்டு வர உங்கள் ஜாதகத்தில் சூரியனின் நிலையை பலப்படுத்தலாம்.

சூரியனுக்கு படைக்கும் இந்த நீரில் சந்தனம் மற்றும் வெல்லம் சேர்ப்பது கூடுதல் நன்மைகளை அளிக்கும் எனவும் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த பரிகாரம் ஆனது உங்கள் பழைய கடன்களை முடிவுக்கு கொண்டு வர உதவும்; தொழில் வாழ்க்கையில் முன்னேற்றம் காணும் வாய்ப்புகளையும் கொண்டு வரும்.

**சனியின் கோபத்தை தணியுங்கள்!**

சனி கிரகத்தின் கோபம், உங்கள் கடன் பிரச்சனைகளை அதிகரிக்கலாம். எனவே, சனியின் கோபத்தை தணித்து, உங்கள் கடன் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயற்சி செய்யுங்கள். சனியின் கோபத்தை தணிக்க, கருப்பு உளுந்து பருப்பினை கடுகு எண்ணெயுடன் சேர்த்து பண்டமாக செய்து, கருப்பு நிற நாய் மற்றும் எருவிற்கு அளிக்கலாம்.

இதேபோன்று, சனிக்கிழமைகளில் மாமிச உணவுகளை தவிர்ப்பதன் மூலமும் சனியின் கோபத்தை குறைத்து, உங்கள் வாழ்க்கையில் நேர்மறை ஆற்றலை அதிகரிக்கலாம் – எதிர்வரும் கடன் பிரச்சனைகளையும் சமாளிக்கலாம். சனியின் கோபத்தை கட்டுப்படுத்துவது, புதிய தொழில் வாய்ப்புகளை கொண்டு வரும், உங்கள் நிதி நிலையை பலப்படுத்தும்!

**புதனின் நிலையை ஒழுங்குப்படுத்துங்கள்!**

வலமான வாழ்வுக்கு உங்கள் ஜாதகத்தில் புதனின் நிலை சீராக இருப்பது அவசியம். புதனின் நிலையை ஒழுங்குப்படுத்த, வாரத்தின் புதன் கிழமைகளில் பசுவுக்கு புல்லை உணவாக அளிப்பது அவசியம். நீங்கள் பணி செய்யும் இடத்தில் குப்பைகளை சேர விடக்கூடாது; சுத்தமாக வைத்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள்.

உங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை சரியான நேரத்தில் செய்து முடிக்க முயற்சி செய்யுங்கள், உங்கள் தனித்திறமைகளை வெளிப்படுத்தும் விஷயங்களில் கவனம் செலுத்துங்கள். புதன்கிழமைகளில் பச்சை நிற ஆடைகள் அணிந்து, மகாவிஷ்ணுவை துளசி மாலை அணிவித்து வழிபடுவதன் மூலமும் உங்கள் ஜாதகத்தில் புதனின் நிலையை பலப்படுத்த முடியும்!

**சந்திரன் வழிபாடு!**

லால் கிதாப் குறிப்புகள் படி சந்திரனை வழிபடுவது உங்கள் மனதை ஒருநிலைப்படுத்தும்; தெளிவான முடிவுகளை எடுக்க ஊக்கப்படுத்தும். மன அமைதி கொண்டு வரும், நிம்மதியான இரவு உறக்கத்திற்கும் உதவி செய்யும். சந்திரனை முறையாக வழிபட, திங்கட்கிழமைகளில் விரதமிருந்து, பால் பாயாசம் தயார் செய்து, சந்திரனுக்கு படைத்து 'ஓம் ஹ்ரீம் வம் சந்திர தேவாய நமஹ' எனும் மூல மந்திரத்தை 24 முறை உச்சரித்து வழிபட வேண்டும்.

உங்கள் மனதில் இருக்கும் குழப்பங்களை தீர்க்க இது உதவி செய்யும், தெளிவான முடிவுகளை எடுக்க உதவி செய்யும், பண விஷயங்களில் பலனளிக்கும் நல்ல முடிவுகளை எடுப்பீர்கள், உங்கள் கடன் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பீர்கள்!

**குரு பகவானை பலப்படுத்துங்கள்!**

உங்கள் ஜாதகத்தில் குரு பகவானை பலப்படுத்த, தொடர்ந்து 11 வாரத்திற்கு வியாழன் கிழமைகளில் – அவித்த கடலை பருப்பேன் வெல்லம் சேர்த்து உருண்டையாக செய்து, பசுவிற்கு உணவாக அளித்து வரலாம். நிதி சார்ந்த விஷயங்களில் தைரியமான முடிவுகளை எடுக்க இது உதவி செய்யும். பழைய கடன் பிரச்சனைகளில் இருந்து தீர்வு பெறவும் உதவியாக இருக்கும். மனதளவிலும் உங்களை பக்குவப்படுத்தும், பதற்றமான முடிவுகளை எடுப்பதில் இருந்து உங்களை பாதுகாக்கும்.

**வெள்ளி நாணயம்!**

கடன் பிரச்சனைகளில் இருந்து நிவாரணம் பெற, சிறு வெள்ளி நாணயம் ஒன்றினை உங்கள் பணப் பையில் வைத்திருப்பது நல்லது. இந்த நாணயத்தை ஒரு போதும் செலவு செய்யாதீர்கள், அடமானம் வைக்காதீர்கள். இந்த வெள்ளி நாணயம் ஆனது, சுக்கிரன் – சந்திரன் நிலைத்தன்மையை உறுதி செய்ய உதவி செய்கிறது.

நிலையான வருமானத்திற்கான வாய்ப்புகளையும் கொண்டு வருகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் வருமானத்தை கொண்டு வரும் வழிகளையும் காண்பித்து தருகிறது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## இரவு உணவிற்குப் பிறகு இந்த ஒரு பானத்தை மட்டும் குடிங்க..! உங்கள் உடல் கொழுப்பு உருகும்!



நாள் முழுவதும் ஜிம் அல்லது டயட்டில் வியர்த்தாலும், சில நேரங்களில் எடை இழப்பு மெதுவாக இருக்கும். இதற்கு முக்கிய காரணம், இரவில் நமது உடலின் வளர்சிதை மாற்றம் குறைவதே ஆகும். இருப்பினும், இரவு உணவிற்குப் பிறகு உட்கொள்ளும் ஒரு சிறப்பு பானம் உங்கள் உடலின் கொழுப்பை எரிக்கும் செயல்முறையை இரவு முழுவதும் சுறுசுறுப்பாக வைத்திருக்கும் என்று நிபுணர்கள் நம்புகிறார்கள். இயற்கை பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் இந்த மாயாஜால பானம் உங்கள் வயிற்றைச் சுற்றியுள்ள கொழுப்பைக் குறைக்க உதவும் என்பது குறித்த சில சுவாரஸ்யமான தகவல்களை பார்க்கலாம்.

**எலுமிச்சை சாறு மற்றும் தேன் பானம்**

எலுமிச்சை சாறு மற்றும் தேன் கலவை எடை இழப்புக்கு மிகவும் பயனுள்ள பானமாகும். எலுமிச்சை சாற்றில் வைட்டமின் சி நிறைந்துள்ளது, இது உடல் கொழுப்பை எரிக்க உதவுகிறது. தேனில் ஆக்ஸிஜனேற்றிகள் உள்ளன, இது வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கிறது. இரவு உணவிற்குப் பிறகு எலுமிச்சை சாறு மற்றும் சிறிது தேனுடன் வெதுவெதுப்பான நீரைக் குடிப்பதால் செரிமானம் மேம்படும் மற்றும் எடை இழப்புக்கு உதவுகிறது.

**இஞ்சி தேநீர்**

இஞ்சியில் இஞ்சிரோல் என்ற பயனுள்ள கலவை உள்ளது, இது உடலின் வளர்சிதை மாற்றத்தை துரிதப்படுத்துகிறது. இது கலோரி எரியும் விகிதத்தை அதிகரிக்கிறது. நீங்கள் ஒரு கப் தண்ணீரில் இஞ்சி துண்டுகளை வேகவைத்து, அதில் சிறிது எலுமிச்சை சாறு அல்லது தேனை சேர்க்கலாம். இரவு உணவிற்குப் பிறகு இஞ்சி தேநீர் குடிப்பது கொழுப்பு எரியும் செயல்முறையை துரிதப்படுத்துகிறது.

துளசி இலைகளில் பல மருத்துவ குணங்கள் உள்ளன. இது உடலில் இருந்து நச்சுகளை அகற்ற உதவுகிறது. துளசி டீ குடிப்பது செரிமானத்தை மேம்படுத்தி எடை குறைக்க உதவுகிறது. துளசி இலைகளை தண்ணீரில் கொதிக்க வைத்து இரவு உணவிற்கு பிறகு குடிப்பது நல்லது.

**புதினா டீ**

புதினா டீ உடலின் செரிமானத்தை மேம்படுத்த உதவுகிறது. இது வாயு, அமிலத்தன்மை மற்றும் வீக்கம் போன்ற பிரச்சனைகளை குறைக்கிறது. பெப்பர்மின்ட் டீ குடிப்பது தொப்பை கொழுப்பை மெதுவாக குறைக்க உதவுகிறது. இரவு உணவிற்கு பிறகு இதை குடிப்பது எடை குறைக்க உதவுகிறது.

**கிரீன் டீ எடை இழப்புக்கு பயனுள்ளதாக இருக்கும்**

கிரீன் டீயில் கேட்டசின் என்ற கலவை உள்ளது, இது உடலின் வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கிறது. இது கொழுப்பை எரிப்பதை துரிதப்படுத்துகிறது. கிரீன் டீ குடிப்பது எடை இழக்க ஒரு எளிய மற்றும் பயனுள்ள வழியாகும். இரவு உணவிற்கு பிறகு ஒரு கப் கிரீன் டீ குடிப்பது உங்களுக்கு நல்ல பலனைத் தரும்.

இந்த பானங்கள் எடை குறைக்க உதவினாலும், வழக்கமான உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியமான உணவு முறையும் அவசியம். எடை இழப்பு படிப்படியாக இருக்க வேண்டும். இந்த பானங்களை சரியான வாழ்க்கை முறையுடன் சேர்த்து பயன்படுத்துவது ஆரோக்கியமான முறையில் எடை குறைக்க உதவும். உங்களுக்கு ஏதேனும் உடல்நலப் பிரச்சினைகள் இருந்தால் மருத்துவரை அணுகுவது நல்லது.

## இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணு உடல்நிலையில் பின்னடைவு..!!



சென்னை, பிப். 24–

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணுவின் உடல்நிலை தற்போது கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 100 வயதை கடந்த நிலையில், வயது முதிர்வு காரணமாக அவருக்கு அவ்வப்போது உடல்நலப் பாதிப்புகள் ஏற்பட்டு வந்தன. இந்தச் சூழலில், முதுமை காரணமாக உறுப்புகளின் செயல்பாடு மந்தமாக இருப்பதாலும், மூச்சு விடு வதில் சிரமம் தொடரு வதா லும் அவரது உடல்நிலை தற்போது மோசமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. மருத்துவர்கள் அவரது உடல்நிலை மாற்றங்களை 24 மணி நேரமும் கண்காணித்து வருகின்றனர். மருத்துவமனை நிர்வாகம் இது குறித்து விரிவான மருத்துவ அறிக்கையை விரைவில் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மார்ச் 4 ஆம் தேதி இந்த மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை..!!



சென்னை, பிப். 24–

அய்யா வைகுண்ட சாமியின் 194–வது அவதாரத் திருவிழா வருவதையொட்டி, நெல்லை, தூத்துக்குடி மற்றும் தென்காசி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமிதோப்பு நோக்கிப் பயணம் மேற்கொள்வார்கள்.

இதனை முன்னிட்டு, பக்தர்களின் வசதிக்காகவும், வழிபாட்டுச் சிறப்பினைப் போற்றும் விதமாகவும் நெல்லை மாவட்டத்திற்கு மார்ச் 4–ம் தேதி உள்ளூர் விடுமுறை அளித்து மாவட்ட ஆட்சியர் அதிகாரப்பூர்வ உத்தரவை பிறப்பித்துள்ளார். ஒவ்வொரு ஊரிலும் உள்ள அய்யா வைகுண்ட சாமியின் பதிகள் மற்றும் திருத்தாங்கல்களில் அன்றைய தினம் சிறப்பு வாகன பவனி மற்றும் அன்னதான நிகழ்ச்சிகள் நடைபெறும்.

குமரி மாவட்டத்தைத் தொடர்ந்து, நெல்லை மாவட்டத்திலும் அய்யா வழி பக்தர்கள் அதிகளவில் வசிப்பதை கருத்தில் கொண்டு இந்த விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மார்ச் 4–ம் தேதி (புதன்கிழமை) நெல்லை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை பொருந்தும். இந்த விடுமுறை தினத்தை ஈடு செய்யும் வகையில், மார்ச் 14–ம் தேதி (சனிக்கிழமை) மாவட்டத்திலுள்ள அனைத்து அலுவலகங்களும் முழு வேலை நாளாகச் செயல்படும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வசமாக சிக்கிக் கொண்ட விஜய்..!! வெச்சு செய்யும் எதிர்க்கட்சிகள்..!!



சென்னை, பிப். 24–

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய், வேலூரில் நடைபெற்ற கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் உணர்ச்சிகரமாக பேசியதோடு மட்டுமல்லாமல், ஒரு கட்டத்தில் கண்கலங்கியது விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது. ''மக்களும் நானும் ரத்தமும் சதையும் போன்றவர்கள், எங்களைப் பிரிக்க முடியாது'' என்று அவர் ஆவேசமாக முழங்கியபோது, பேச முடியாமல் தவித்துக் கண்ணீர் சிந்திய நிகழ்வு அங்கிருந்த தொண்டர்களை நெகிழச் செய்தது. ஆனால், இந்த உருக்கமான தருணம் கூட ஒரு நன்கு திட்டமிடப்பட்ட 'ஸ்கிரிப்ட்' (Script) தான் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

விஜய்யின் இந்த அழுகையை விமர்சிக்கும் தரப்பினர், இணையத்தில் ஒரு ரகசியக் குறிப்புத் தாளை ஆதாரமாக வெளியிட்டுச் சமூக வலைதளங்களில் புயலை கிளப்பியுள்ளனர். அந்தத் தாளில், விஜய் எப்போது பேச வேண்டும், எங்கு இடைவெளி விட வேண்டும், எந்த இடத்தில் மைக்கை விட்டு விலகிச் சென்று அழ வேண்டும் என்பது வரை மிக துல்லியமாக எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக, ''இந்த வரியைப் பேசி முடித்ததும் சிறிது நேரம் அமைதியாக இருக்க வேண்டும்; பிறகு பேச முடியாமல் தவிப்பது போலப் பாவனை செய்து, மைக்கை விட்டுச் சற்று தள்ளிப் போய் அழ வேண்டும்; பின்னர் மீண்டும் மேடைக்கு வந்து மன்னிப்புகோரிவிட்டு உணர்ச்சிகரமாகத் உரையைத் தொடர வேண்டும்'' போன்ற ரகசியக் குறிப்புகள் அதில் இடம்பெற்றுள்ளதாக அந்தச் செய்தி காட்டுத்தீயாக பரவி வருகிறது. திரைத்துறையில் பல ஆண்டுகால அனுபவம் கொண்டவர் என்பதால், விஜய் எப்போதும் வசனங்களை மனப்பாடம் செய்துதான் பேசுவார் என்ற விமர்சனம் அவர் அரசியலுக்கு வந்த நாளிலிருந்தே இருந்து வருகிறது. தற்போது வைரலாகியுள்ள அந்த 'ஸ்கிரிப்ட்' பேப்பர், அந்த சந்தேகத்தை உறுதிப்படுத்துவது போல அமைந்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்ற னர். மேடையில் வெளிப்படும் உணர்ச்சிகள் கூட கேமராக்களுக்காக திட்டமிடப்பட்டவையா என்ற கேள்வி, தவெக ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே சமூக வலைதளங்களில் பெரும் போர் உருவாவதற்கு காரணமாகியுள்ளது.

# 8 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இடமாற்றம்!




சென்னை, பிப். 24–

தமிழ்நாடு அரசு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 8 பேரை இடமாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளது. அதன்படி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கரூர் மாவட்டங்களின் ஆட்சியர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள ஆணையில் கூறியிருப்பதாவது, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை கூடுதல் தலைமைச் செயலாளராக இருந்த ஆர். ஜெயா, சிறப்பு முயற்சிகள் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

காஞ்சிபுரம் கலெக்டராக இருந்த கலைச்செல்வி மோகன் பொருளியல் மற்றும் புள்ளியல் துறை இயக்குநராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

செங்கல்பட்டு கலெக்டராக இருந்த சினேகா, காஞ்சிபுரம் கலெக்டராக மாற்றப்பட்டுள்ளார். செங்கல்பட்டு சார் ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன், செங்கல்பட்டு கலெக்டராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். திருவள்ளூர் சார் ஆட்சியர் கு.ரவிகுமார், கரூர் மாவட்ட கலெக்டராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஒன்றிய அரசுப் பணியிலிருந்து திரும்பிய சந்திர சேகர் சாகமூரி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் (CMDA) முதன்மைச் செயல் அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் செயலாளராக அ.சண்முக சுந்தரம் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஈரோடு வணிகவரித்துறை இணை ஆணையராக நே.பொன்மணி நியமிக்கப்பட்டுள்ளார்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் 5,55,131 வாக்காளர்கள் உள்ளனர்- மாவட்ட ஆட்சித்தலைவர் மிருணாளினி தகவல்!




பெரம்பலூர், பிப்.24–

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வெளியிட்டார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது, இறுதி வாக்காளர் பட்டியலின் படி 147–பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் உள்ள 387 வாக்கு சாவடிகளில் மொத்தம் 2,88,449 வாக்காளர்கள் உள்ளனர். இதில் 1,39,914 ஆண் வாக்காளர்களும், 1,48,507 பெண் வாக்காளர்களும், 28 மூன்றாம் பாலின வாக்காளர்கள் உள்ளனர்.

148–குன்னம் சட்டமன்ற தொகுதியில் உள்ள 345 வாக்கு சாவடிகளில் மொத்தம் 2,66,682 வாக்காளர்கள் உள்ளனர். இதில் 1,31,720 ஆண் வாக்காளர்களும், 1,34,959 பெண் வாக்காளர்களும், 3 மூன்றாம் பாலின வாக்காளர்கள் உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் இரண்டு சட்டமன்ற தொகுதிகளிலும் 2,71,634 ஆண் வாக்காளர்களும் 2,83,466 பெண் வாக்காளர்களும், 31 மூன்றாம் பாலின வாக்காளர்கள் என மொத்தம் 5,55,131 வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீட்டிற்கு பிறகு வாக்காளர் பட்டியலில் தொடர் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதால் வாக்காளர்கள் தங்களது பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் மேற்கொள்ள விண்ணப்பங்கள் வழங்கிடலாம் இவ்வாறு தெரிவித்தார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சொர்ணராஜ், வாக்காளர் பதிவு அலுவலர்கள் (குன்னம்) சக்திவேல், (பெரம்பலூர்) அனிதா, தனி வட்டாட்சியர் (தேர்தல்) அருளானந்தம், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து வட்டாட்சியர்கள் கலந்துகொண்டனர்.

# சசிகலா, ஓ.பி.எஸ். NDA கூட்டணிக்கு வருவார்கள் - டி.டி.வி.தினகரன்!



மதுரை, பிப். 24–

மதுரையில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் செய்தியா ளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* சசிகலாவும், ஓ. பன்னீர்செல்வமும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வருவார்கள்.
* தீய சக்தி தி.மு.க. ஆட்சியை வீழ்த்தி என்டிஏ கூட்டணி ஆட்சி அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு வருவார்கள்.
* முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் தொண்டர்கள் 99.9 சதவீதம் பேர் தற்போது ஒன்றாக இணைந்துள்ளோம்.
* தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் 40 தொகுதிகள் வரை கேட்டு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்ல் – 612 காலியிடங்கள்




நிறுவனத்தின் பெயர்: HPCL இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்

வேலை வகை: மத்திய அரசு வேலைகள்

வேலைவாய்ப்பு வகை: பயிற்சி பயிற்சி

காலம்: ஒரு வருடம்

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 612 பட்டதாரி பயிற்சி பயிற்சியாளர்கள் – பொறியியல் [சிவில்/மெக்கானிக்கல்/எலக்ட்ரிக்கல்/இன்ஸ்ட்ருமென்டேஷன்] பதவிகள்

வேலையிடும் இடம்: இந்தியா முழுவதும்

தொடக்க தேதி: 16.02.2026

கடைசி தேதி: 02.03.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.hindustanpetroleum.com/

# தொகுதி பகிர்வு தொடர்பாக பேச்சுவார்த்தைக்குழு; இந்திய கம்யூனிஸ்டு கட்சி அறிவிப்பு!




சென்னை, பிப். 24–

தமிழக சட்டசபை தேர்தல் நடைபெற இன்னும் ஓரிரு மாதங்களே உள்ளன. இந்நிலையில், தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ள இந்திய கம்யூனிஸ்டு கட்சி தொகுதி பகிர்வு தொடர்பாக பேச்சுவார்த்தைக்குழு அமைத்துள்ளது.

இதுபற்றி அக்கட்சி அறிக்கை வெளியிட்டு உள்ளது. அதில், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக்குழு கூட்டம் எஸ். கலைச்செல்வம் தலைமையில் நடைபெற்றது.

எதிர்வரும் சட்டசபை தேர்தலில் மத சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில், தி.மு.க. தலைமையோடு தொகுதி பகிர்வு பேச்சுவார்த்தை நடத்த மு. வீரபாண்டியன், (மாநில செயலாளர்) ரா.முத்தரசன், கே.சுப்பராயன் எம்.பி., கோ.பழனிசாமி ஆகிய 4 உறுப்பினர்கள் கொண்ட பேச்சுவார்த்தை குழு அமைக்கப்பட்டது. இந்த குழு வருகிற 27–ந்தேதி முதல்கட்ட பேச்சுவார்த்தையில் பங்கேற்கும் என தெரிவித்து கொள்கிறோம். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## சினிமா துளிகள்..!

### 'ஆஜா ராஜா' பின்னணி இசைக்கு Vibe செய்த அனிருத் – வைரல் வீடியோ




45 ஆண்டுகளுக்குப் பிறகு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் மற்றும் உலகநாயகன் கமல்ஹாசன் இணைந்து நடிக்கும் மெகா பட்ஜெட் திரைப்படத்தை இயக்குநர் நெல்சன் இயக்குவது உறுதியாகியுள்ளது. ரெட் ஜெயண்ட் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தின் ப்ரோமோ வீடியோ சமீபத்தில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது.

இந்தப் படத்தை இயக்குநர் நெல்சன் இயக்குவதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அனிருத் இந்தப் படத்திற்கு இசையமைக்க உள்ளார். இப்படத்திற்கு தற்காலிகமாக KHxRK என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

திரைத்துறையில் உச்ச நட்சத்திரங்களான கமல் ஹாசன் மற்றும் ரஜினிகாந்த் ஒரே திரைப்படத்தில் நடிப்பது ரசிகர்கள் மட்டுமின்றி திரைத்துறையிலும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த ப்ரோமோ வீடியோவில் அனிருத்தின் துள்ளலான ரெட்ரோ இசை அனைவரையும் கவர்ந்தது. இந்நிலையில், இந்த பின்னணி இசையை உருவாக்கின்போது வைப் செய்த வீடியோவை அனிருத் தனது இன்ஸ்டா பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இந்த வீடியோ இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.



மதுரை மணி
உள்ளூர் 24.02.26 வெளியூர் 25.02.26



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற 24–வது அமைச்சரவைக் கூட்டத்தில், தமிழ்நாட்டில் புதிதாக நிறுவப்படவுள்ள மற்றும் விரிவாக்கம் மேற்கொள்ளப்படவுள்ள 46 முதலீட்டுத் திட்டங்களுக்கு ஊக்கச்சலுகைகள் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களினால் ரூ.31,592.39 கோடி முதலீடு மேற்கொள்ள உறுதியளிக்கப்பட்டுள்ளதுடன், 61,521 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும்.

# அதிமுக ஆட்சியில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.10 ஆயிரம்: எடப்பாடி பழனிசாமி அதிரடி!

சென்னை, பிப். 24–

சட்டமன்ற தேர்தலுக்கான 3–ம் கட்ட தேர்தல் வாக்குறுதிகளை எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். அதன் விபரம் பின்வருமாறு;

1. தற்போதைய ஆட்சியில் விலைவாசி உயர்ந்துள்ளதால், மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வரி உயர்த்தப்பட்டுள்ளது. மக்களின் குடும்ப சுமை பன்மடங்கு அதிகரித்துள்ளது. எனவே மக்களின் சுமையை போக்க அதிமுக ஆட்சி அமைந்தவுடன் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.10 ஆயிரம் கருணைத் தொகை வழங்கப்படும்.



2. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்து காத்திருக்கும் பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் ரூ.2,000 வழங்கப்படும். 12ம் வகுப்பு வரை படித்து, வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும்.

3.மீன்பிடி தடைக்காலங்களில் உதவித்தொகை ரூ.8 ஆயிரத்தில் இருந்து ரூ.10 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

4. பொங்கல் பரிசுத்தொகுப்புடன் இனி ஆண்டு தோறும் ரூ.1,000 வழங்கப்ப டும்

5. கைத்தறி நெசவாளர்களுக்கான விலையில்லா மின்சாரம் 300 யூனிட்டில் இருந்து 400 யுனிட்டாக உயர்த்தப்படும்.

6. விசைத்தறி நெசவாளர்களுக்கான விலையில்லா மின்சாரம் 1000 யூனிட்டில் இருந்து 1,400 யுனிட்டாக உயர்த்தப்படும்.

7. நகரப்பகுதிகளில் நடைபாதை, சிறுவியாபாரிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்படும்.

வருவாயை பெருக்கி, நாங்கள் அறிவித்த நலத்திட்ட உதவிகள் முழுமையாக நிறைவேற்றப்படும்.” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# டில்லி- லே ஸ்பைஸ்ஜெட் விமானம் நடுவானில் பழுது; 150 பயணிகளுடன் அவசர தரையிறக்கம்!

புதுடில்லி, பிப். 24–

டில்லியில் இருந்து காஷ்மீரின் லே பகுதிக்குச் சென்ற ஸ்பைஸ் ஜெட் விமானம் நடுவானில் பழுதானது. இதையடுத்து, விமானம் மீண்டும் டில்லிக்கே திருப்பி விடப்பட்டது.


தலைநகர் டில்லியில் இருந்து லே பகுதிக்கு SG 121 என்ற ஸ்பைஸ் ஜெட் விமானம் இன்று காலை 6.45 மணிக்கு புறப்பட்டது. இந்த விமானத்தில் 150 பயணிகள், விமான சிப்பந்திகள் உள்ளிட்டோர் இருந்தனர்.

விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்த போது, இன்ஜினில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு இருப்பதை விமானிகள் குழுவினர் கண்டறிந்தனர். இதையடுத்து, முன் எச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கையாக விமானத்தை மீண்டும் டில்லிக்கே திருப்பி இயக்க முடிவு செய்தனர்.

அதன்படி, டில்லி விமான நிலையத்தில் பாதுகாப்பாக விமானம் தரையிறக்கப்பட்டது. பயணிகள் அனைவரும் பத்திரமாக இறக்கி விட்டனர். தயாராக இருந்த பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு மீட்புக் குழுவினர் உதவியுடன் விமானம் ஆய்வுக்காக தனி இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

விமானத்தில் எதனால் கோளாறு ஏற்பட்டது என்பதுபற்றிய விவரங்கள் வெளியிடப்பட வில்லை. ஸ்பைஸ்ஜெட் விமான நிறுவனம், ‘டில்லியில் விமானம் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது, பயணிகள் அனைவரும் நலமாக உள்ளனர்’ என்று தெரிவித்துள்ளது.

## தொடர்ந்து உயரும் தங்கம் விலை!



சென்னை, பிப். 24–

தங்கம் விலை இன்று உயர்ந்துள்ளது. அதன்படி கிராமுக்கு 30 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,890–க்கும் சவரனுக்கு 240 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.1,19,120–க்கும் விற்பனையாகிறது.

தங்கத்துக்குப்போட்டியாக நேற்று உயர்ந்த வெள்ளி விலை இன்று குறைந்துள்ளது. அதன்படி கிராமுக்கு 10 ரூபாய் குறைந்து ஒரு கிராம் வெள்ளி 290 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# சென்னை மின்சார ரெயில் சேவைகளின் எண்ணிக்கை மேலும் குறைப்பு!

சென்னை, பிப். 24–

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் மறுசீரமைப்பு பணிகள் பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வருகிறது. தற்போது மின்சார ரெயில்கள் இயக்கப்பட்டு வந்த 10வது, 11வது நடைமேடையில் பணிகள் தொடங்கி இருப்பதால் கடந்த 20–ந்தேதியில் இருந்து 5 மற்றும் 6–வது நடைமேடையில் இருந்து மின்சார ரெயில்கள் இயக்கப்படுகிறது.



இதன் காரணமாக சேவைகளும் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த 5 நாட்களாக பொதுமக்கள் கடும் அவதி அடைந்து வருகின்றனர். பொதுமக்கள் சிரமங்களை பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று ரெயில்வே துறை வேண்டுகோள் விடுத்துள்ளது. புறநகர் மின்சார ரெயில் பயணிகள் வசதிக்காக மாநகரப் போக்குவரத்து கழகம் கூடுதலாக பஸ் சேவை அளிக்கிறது. குறிப்பாக எழும்பூர் ரெயில் நிலையத்தில் இருந்து முக்கிய பகுதிகளுக்கு கூடுதலாக பஸ்கள் இயக்கப்படுகிறது.

இந்த நிலையில், சென்னை கடற்கரை– செங்கல்பட்டு வழித்தடத்தில் புறநகர் ரெயில் சேவை மேலும் குறைக்கப்பட்டுள்ளது. சீரமைப்பு பணிகள் காரணமாக 204–ஆக இருந்த ரெயில் சேவைகள் 164–ஆக குறைக்கப்பட்ட நிலையில், தற்போது 115–ஆக மேலும் குறைக்கப்பட்டுள்ளது. இதனிடையே, எழும்பூர்– பரங்கிமலை, எழும்பூர்– கூடுவாஞ்சேரி, எழும்பூர்– செங்கல்பட்டு இடையே கட் சர்வீஸ் ரெயில்கள் இயக்கப்படும் எனவும் ரெயில்வே அறிவித்துள்ளது. எழும்பூரில் இருந்து செல்லும் ரெயில்கள் சேத்துபட்டு, கோடம்பாக்கம், நுங்கம்பாக்கத்தில் நிற்காது. எழும்பூருக்கு வரும் போது பல்லாவரம், கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், சேத்துபட்டில் நிற்காது. வார நாட்களில் இயக்கப்படும் கும்மிடிப்பூண்டி– தாம்பரம் ரெயில் செங்கல்பட்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனந்த இல்லம் (முதியோர்களுக்கான இல்லம்)
(NLC இந்திய நிறுவனம் சமூகப் பொறுப்புணர்வு திட்டம் (CSR)
மசூதி சாலை, வட்டம்-6, நெய்வேலி-607 803.
NLC INDIA CREATING WEALTH FOR WELLBEING
HelpAge India | Fighting isolation, poverty, neglect
முற்றிலும் இலவசம்
சேர்க்கைக்கான தகுதிகள்
* 62 வயதுக்கு மேல் * ஆண் வாரிசு இல்லாதவர்கள்
* அரசு பென்ஷன் வாங்காதவர்கள் * சொத்து இல்லாதவர்கள்
தகுதி உடையவர்கள், விரும்பம் உள்ளவர்கள்
மேற்கண்ட விலாசத்தில் அல்லது கைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.
சேர்க்கை நடைபெறுகிறது.
விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி எண் :
96008 33120, 98655 45120
கரன், நெய்வேலி - 3. ✆ : 94885 37900

# திமுக கூட்டணியில் காங்கிரஸ் 30 தொகுதிகளுக்கு மேல் கேட்பதாக தகவல்!

சென்னை, பிப். 24–

தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடந்து வரும் நிலையில், திமுக கூட்டணியில் காங்கிரஸ் 30 தொகுதிகளுக்கு மேல்



கேட்பதாக தகவல் வெளியாகியுள்ளது. கடந்த முறை 25 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் இம்முறை 30–க்கு மேல் வழங்க வலியுறுத்தி வருவதாக சொல்லப்படுகிறது. மாநிலங்களவை பதவி ஒன்று கேட்பதாக கூறப்படுகிறது.

இதைபோல உள்ளாட்சி மேயர் பதவிகள் குறித்தும் திமுகவிடம் காங்கிரஸ் பேசி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த தேர்தலை விட காங்கிரசுக்கு 2 அல்லது 3 தொகுதிகளை திமுக கூடுதலாக வழங்க வாய்ப்பு உள்ளது. சட்டமன்ற தேர்தல் மட்டுமின்றி மாநிலங்களவை தேர்தல், உள்ளாட்சி தேர்தல் பங்கீட்டையும் முடிக்க காங்கிரஸ் கட்சி கோரிக்கை வைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ம.தி.மு.க.வுக்கு கடந்த சட்டமன்ற தேர்தலில் 6 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு 4 இடங்களில் வெற்றி பெற்றது. தற்போது தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க., கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் ஆகிய கட்சிகள் புதிதாக ஐக்கியமாகி இருப்பதால் கூட்டணி கட்சிகளுக்கு கடந்த தேர்தலைவிட தொகுதிகளின் எண்ணிக்கையை குறைத்து வழங்க தி.மு.க. திட்டமிட்டுள்ளது. எனவே ம.தி.மு.க.வுக்கு 4 தொகுதிகள் வரை ஒதுக்கும் மனநிலையில் தி.மு.க. இருப்பதாக தெரிகிறது. மேலும் உதயசூரியன் சின்னத்தில்தான் போட்டியிட வேண்டும் என்ற நிர்ப்பந்தமும் விதிக்கப்பட வாய்ப்புள்ளது.



தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை காமராசர் சாலை, தமிழ்நாடு உயர் கல்வி மன்ற வளாகத்தில் அமைந்துள்ள முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் 78–வது பிறந்தநாளை முன்னிட்டு, திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவப்படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன் செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) இரா. பாஸ்கரன், மற்றும் துறை உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

# ஏடிஎம்-ல் பணம் எடுப்பதுபோல் இனி ரேஷன் பொருட்களையும் பெறலாம்: மத்திய அரசு கொண்டுவரும் புதிய வசதி!

புதுடெல்லி, பிப். 24–

ரேஷன் பொருட்கள் வழங்குவதில் நடைபெறும் முறைகேட்டை தடுக்க அரசு எவ்வளவோ நடவடிக்கை எடுத்தாலும், முறைகேடுகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இவற்றை தடுக்கும் வகையில், டிஜிட்டல் முறையில் உணவுப் பொருட்கள் விநியோகத்தை செயல்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. முதற்கட்டமாக இந்த திட்டம் குஜராத் மாநிலத்தில் உள்ள ஒருசில மாவட்ட ரேஷன் கடைகளில் சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பும் கிடைத்துள்ளது. இந்த திட்டத்தில், ரேஷன் கார்டுதாரர்களுக்கு,



அரசு தரப்பில் வழங்கப்படும் உணவு பொருட்களுக்கான கூப்பன், சம்பந்தப்பட்ட நபர்களின் மொபைல் எண்ணுக்கு அனுப்பப்படும். அவர் ரேஷன் கடைக்கு சென்று தனது மொபைல் போனுக்கு வந்த கூப்பனை பயன்படுத்தி பொருட்கள் வாங்க முடியும்.

**‘அன்னபூர்ணா’ இயந்திரம்**

இதுதவிர, மக்கள் 24 மணி நேரமும் ரேஷன் பொருட்களை வாங்கிக்கொள்ள வசதியாக, ஏ.டி.எம். இயந்திரம்போல், ‘அன்னபூர்ணா’ என்ற இயந்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தில் ரேஷன் பொருட்கள், பாக்கெட்டுகளில் வைக்கப்படும். இயந்திரத்தில் கண் கருவிழி, விரல் ரேகை போன்றவற்றை பதிவு செய்து, பொருட்களை எடுத்துக்கொள்ள முடியும். இயந்திரத்தில் இருக்கும் ‘கியூ ஆர் கோடு’ குறியீட்டை பயன்படுத்தியும் பொருட்கள் வாங்க முடியும். இந்த இயந்திரத்தில் 35 விநாடிகளில் 25 கிலோ பொருட்களை பெற முடியும். இந்த திட்டம் விரைவில் தமிழ்நாடு உள்பட எல்லா மாநிலங்களிலும் நடைமுறைக்கு வர உள்ளது.

# சட்டசபை தேர்தல்: தமிழகம் வருகிறார் தலைமை தேர்தல் ஆணையர்!

சென்னை, பிப். 24–

தேர்தல் ஆணைய அதிகாரிகள் தேர்தலுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள தொடங்கி இருக்கிறார்கள். இதன்படி தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தலைமையில் தேர்தல் ஆணைய குழுவினர் நாளை தமிழகம் வருகிறார்கள்.



இந்த அதிகாரிகள் நாளை முதல் 3 நாட்கள் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் தங்கி இருந்து சட்டசபை தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்கிறார்கள். இந்த சுற்றுப்பயணத்தின்போது தேர்தல் ஆணைய அதிகாரிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்கள்.

இதற்கிடையே சட்டசபை தேர்தலை அமைதியான முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தமிழக காவல் துறையில் உள்ள 1 லட்சத்துக்கும் அதிக மான காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட இருக்கிறார்கள்.

# 25 எம்.எல்.ஏக்கள் வெளிநாடு சுற்றுலா.. 31 எம்.எல்.ஏ.க்கள் போர்க்கொடி.. திணறலில் கர்நாடக காங்கிரஸ் அரசு!

கர்நாடகா, பிப். 24–

கர்நாடகாவில் கடந்த 2023ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. அப்போது முதல்வர் பதவி விவகாரம் தொடர்பாக சித்தராமையாவுக்கும், டி.கே. சிவக்குமாருக்கும் இடையே பிரச்சனை எழுந்த போது, காங்கிரஸ் மேலிடம் தலையிட்டு சித்தராமையாவை முதலமைச்சர் ஆகவும், டி.கே. சிவக்குமாரை துணை முதலமைச்சர் ஆகவும் ஆக்கியது.

கடந்த 4 மாதங்களாக சித்தராமையாவுக்கும், டி.கே. சிவக்குமாருக்கும் இடையே பனிப்போர் நிலவி வருகிறது. இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் பொதுவெளியில் தாக்கி பேசி வருகின்றனர். காங்கிரஸ் மேலிடம் டெல்லிக்கு இருதரப்பையும் அழைத்து சமாதான பேச்சுவார்த்தை நடத்தியது. எனினும் இரு தரப்புமே இந்த விவகாரத்தில் கட்சி மேலிடம் எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவோம் என தெரிவித்தனர். இருப்பினும் இந்த விவகாரத்தில் இறுதி முடிவு எட்டப்படாமல் தள்ளி போய்க்கொண்டே இருக்கிறது.

இத்தகைய சூழலில் டி.கே. சிவக்குமார் தனது ஆதரவு எம்எல்ஏக்கள் மூலம் கட்சி மேலிடத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்காக தனது ஆதரவு எம்எல்ஏக்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க திட்டமிட்டு இருந்தார். ஆனால் கட்சி மேலிடம் இதையறிந்து எம்.எல்.ஏக்கள் வெளிநாடு செல்ல தடை விதித்தது .

இதற்கிடையே சித்தராமையாவின் ஆதரவு எம்எல்ஏக்கள் 25 பேர் தங்களது குடும்பத்தினருடன் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு கடந்த



சில நாட்களுக்கு முன் சுற்றுலா புறப்பட்டு சென்றனர்.

இதனிடையே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதல்முறையாக எம்எல்ஏ ஆகியிருக்கும் 38 பேரில் 31 பேர் அமைச்சரவை மாற்றம் கோரி திடீரென போர்க்கொடி தூக்கியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் டி.கே சிவக்குமாரின் ஆதரவாளர்கள் என கூறப்படுகிறது.

31 பேரும் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுனா கார்கே, நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, முதலமைச்சர் சித்ராமையா, துணை முதல்வர் டி.கே. சிவக்குமார், காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் சுர்ஜேவாலா ஆகியோருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். அந்த கடிதத்தில், ‘கர்நாடகாவில் காங்கிரஸ் கட்சியில் முதல் முறையாக 38 எம் எல் ஏக்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதில் நாங்கள் 31 பேர் இந்த கடிதத்தை எழுதுகிறோம்.

கர்நாடகாவில் அமைச்சரவை மாற்றியமைக்கப்படும்போது முதல்முறையாக எம்எல்ஏவாகியிருக்கும் எங்களில் 5 பேருக்கு அமைச்சர் பதவி வழங்க வேண்டும். புதியவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்குவது என்பது முதல் முறையாக நடப்பது கிடையாது. பல்வேறு மாநிலங்களிலும் இது போல் நடக்கத்தான் செய்கிறது. அதனால் எங்களுக்கு அமைச்சருக்கான வாய்ப்பு வழங்க வேண்டும், அவ்வாறு வழங்கினால் எங்களால் மென்மேலும் மக்கள் பணி செய்ய முடியும். எங்களின் இந்த கோரிக்கையை கட்சித் தலைமை பரிசீலிக்க வேண்டும்’ என அதில் கூறியுள்ளனர்.

இந்தக் கடிதம் இரண்டு மாதங்களுக்கு முன்பு எழுதப்பட்டதாகவும், அது தற்போது பொதுவெளியில் பகிரங்கமாகி இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த 31 எம்எல்ஏக்களில் பெரும்பாலானவர்கள் டி.கே சிவக்குமாரின் ஆதரவாளர்களாக இருப்பதால் இந்த விவகாரம் கர்நாடகா அரசியலில் புதிய பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. முதலமைச்சர் பதவி விவகாரம் தொடர்பாக கர்நாடகா அரசியலில் நடந்து வரும் அடுத்தடுத்த மாற்றங்கள் கர்நாடக மக்களிடையே பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

## அமைச்சர் கே.என்.நேரு மீது ஊழல் வழக்கு; உச்சநீதிமன்றத்தில் கேவியட் மனு!




டெல்லி, பிப். 24–

அமைச்சர் கே.என். நேரு மீது உடனே ஊழல் வழக்கு பதிவு செய்ய சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதை எதிர்த்து, நேரு தரப்பில் உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்ய இருப்பதாக தகவல்கள் வெளியான நிலையில், அதிமுக மற்றும் அமலாக்கத்துறை தரப்பில் உச்சநீதிமன்றத்தில் கேவியட் மனு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020